## சிவகாசி மேயர் சங்கீதா – இன்பம் இல்லத் திருமண வரவேற்பு விழா:

# அண்ணாவும் ஆற்றலும் போல, கலைஞரும் கழகமும் போல, தலைவரும் உழைப்பும் போல பல்லாண்டு வாழ்க!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

**சிவகாசி,டிச.5–**

**சிவகாசியில் நடைபெற்ற, சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா – மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் இன்பம் ஆகியோர் மகனும், சிவகாசி பகுதி அமைப்பாளருமான தம்பி பிர்லா இன்பம் – பேட்ரிஷியா மேபல் ஜீலியானா ஆகியோரின் திருமண வரவேற்பு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

இன்றைக்கு சிவகாசி மாநகராட்சியின் மேயர் அக்கா சங்கீதா, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் இன்பம் அவர்களின் மகனும், கழகத்தின் இளைஞர் அணி பகுதி அமைப்பாளருமான தம்பி பிர்லா இன்பம் மற்றும் சகோதரி பேட்ரிசியா மேபல் ஜூலியானா இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, உங்களுடன் சேர்ந்து மணமக்களை வாழ்த்துகின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். உங்களோடு சேர்ந்து நானும் மணமக்களை வாழ்க, வாழ்க என வாழ்த்துகிறேன்.

### வரவேற்பு நிகழ்ச்சி

அண்ணன் தங்கம் தென்னரசு அவர்கள் பேசும்போது குறிப்பிட்டு சொன்னார். கடந்த ஒரு வாரமாகவே தமிழ்நாடு முழுக்க பல மாவட்டங்களில் பலத்த மழை. அதிலும் குறிப்பாக, சென்னையில் கடந்த மூன்று நாட்களாக மிகப்பெரிய மழை பெய்து கொண்டிருக்கிறது. இன்றைக்கும் பெய்து கொண்டிருக்கிறது. எனவே, இந்த திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்வேனா, இல்லையா என்ற அந்த சந்தேகம் இருந்தது. ஆனால், என்ன ஆனாலும் சரி, நிச்சயமாக இந்த திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்ற அந்த உணர்வோடு இன்றைக்கு இங்கே வந்திருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு காலை நம்முடைய தலைவர் அவர்கள் என்னை தொலைபேசியில் அழைத்து, ``நிச்சயமாக நீ இந்த திருமணத்திற்கு சென்றுதான் ஆக வேண்டும், கட்டாயம் அந்த நிகழ்ச்சியில் எந்த மாற்றமும் இருக்கக் கூடாது, அதில் கலந்து கொண்டு வா” என்று என்னை வழியனுப்பி வைத்திருக்கிறார்கள்.

மதுரையில் இருந்து இங்கே வருகின்ற வழியெங்கும் சிறப்பான வரவேற்பை அளித்த நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த திருமண நிகழ்ச்சியில், உங்களுடன் சேர்ந்து நானும் மணமக்களை வாழ்த்துவதில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சி.


### காதல் திருமணம்

ஏனென்றால், வரும்போது என்னிடம் சொன்னார்கள், இது ஒரு காதல் திருமணம் என்று. தம்பி பிர்லாவுக்கும், பேட்ரிசியாவுக்கும் நம்முடைய ஸ்பெஷல் வாழ்த்துகளை நாம் தெரிவித்தாக வேண்டும். பெற்றோர்கள் திருமணம் பார்த்து வைப்பது ஒரு சிறப்பான நிகழ்ச்சிதான். எல்லோரும் நினைத்துக் கொள்வார்கள் காதல் திருமணம் சுலபம் என்று. ஆனால், எல்லாவற்றையும் விட மிக மிகக் கஷ்டம் இந்தக் காதல் திருமணம்தான்.

முதலில் அந்தப் பையன் பெண்ணிடமோ, பெண் பையனிடமோ காதலை வெளிப்படுத்த வேண்டும்; அதற்கு மிகப்பெரிய தைரியம் வேண்டும். 'ப்ரொபோஸ்' பண்ண வேண்டும், 'ப்ரொபோஸ்' பண்ணா மட்டும் போதாது, அதன் பிறகு ஒருத்தரை ஒருத்தர் சம்மதிக்க வைக்க வேண்டும், காதலை நிரூபித்துக் காட்ட வேண்டும்.

அதன் பிறகு, பெண்ணின் அப்பா அம்மாவையோ, பையனின் அப்பா அம்மாவையோ சம்மதிக்க வைக்க வேண்டும். ஒரு வழியாக பல பிரச்சினைகளைத் தாண்டி, பையனின் அப்பா அம்மாவையும், பெண்ணின் அப்பா அம்மாவையும் சம்மதிக்க வைத்து விட்டால், அதன் பிறகுதான் பெரிய பிரச்சினையே இருக்கிறது. சொந்தக்காரர்கள் எல்லாம் கிளம்பி வருவார்கள். அத்தை, மாமா, பெரியப்பா, பெரியம்மா, சித்தி, சித்தப்பா இப்படிப் பல்வேறு வகையிலிருந்து பிரச்சினைகள் வரும். ஏதாவது ஒரு தடையைப் போட முயற்சிப்பார்கள்.





இப்படிப் பல்வேறு சிக்கல்களை தாண்டித்தான் இன்றைக்கு இந்த காதல் திருமணம் நம் அனைவரின் வாழ்த்துகளுடன் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தச் சிரமங்களையே தம்பி பிர்லாவும், சகோதரி பேட்ரிசியாவும் கடந்து வந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இவ்வளவு சிக்கல்கள் இருக்காது என்று நாம் நம்புவோம்.

### உழைத்த குடும்பம்

தம்பி பிர்லாவின் குடும்பம் தலைமுறை தலைமுறையாகக் கழகத்திற்காக, இயக்கத்திற்காக உழைத்த குடும்பம். அப்படிப்பட்ட கழகத்திற்காக உழைத்த குடும்பத்தின் திருமண விழாவில் பங்கேற்பதற்கான வாய்ப்பை அளித்த மாவட்டக் கழகச் செயலாளர் மாண்புமிகு நிதி அமைச்சர் அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தம்பி பிர்லா அவர்களும் இன்றைக்கு இளைஞர் அணியில் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். அவருடைய அம்மா மேயர், அப்பா வர்த்தக அணியின் அமைப்பாளர். அதுமட்டும் இல்லை, பிர்லாவின் தாத்தாவும் திராவிடர் கழகத்திலிருந்து பணியாற்றி, பின்பு திராவிட முன்னேற்றக் கழகத்தில் பணியாற்றி இருக்கிறார். அந்த வழியில்தான் தம்பி பிர்லா இன்றைக்கு இளைஞர் அணியில் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இளைஞர் அணியின் செயலாளராக நான் இந்தத் திருமண விழாவில் கலந்துகொள்வது, எனக்கு கூடுதல் மகிழ்ச்சி.

குறிப்பாக, கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு தமிழ்நாடு முழுக்க இளைஞர் அணியின் சார்பாகப் பேச்சுப் போட்டிகள் நடத்தினோம். அந்தப் பேச்சுப் போட்டியிலும் தம்பி பிர்லா அவர்கள் பங்கேற்று, அதிலும் அவர் வெற்றி பெற்றிருக்கிறார்.

### சுயமரியாதை உணர்வு

பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர் திருமணத்திற்குப் பின்பும் அதே உணர்வோடு இருக்க வேண்டும் என்று அவசியம் கிடையாது. எந்த இடத்தில் விட்டுக்கொடுக்க வேண்டுமோ, அந்த இடத்தில் விட்டுக்கொடுத்து, எந்த இடத்தில் உரிமைக்காக நிற்க வேண்டுமோ, அந்த இடத்தில் உரிமைக்காக அவர் நிற்பார் என்று நம்புகின்றேன்.

தம்பி பிர்லாவின் தாத்தா அதாவது அண்ணன் இன்பம் அவர்களின் தந்தையார் தவமணி அவர்கள் கழகத்தின் மிகத் தீவிரமான ஆதரவாளர். அவர் ஒரு வாடகை வீட்டில் குடியிருந்தபொழுது, கழகத்துடைய கொடியை அவர் வீட்டில் ஏற்றியிருக்கிறார், பறக்கவிட்டிருக்கிறார். அதைப் பார்த்த அந்த வீட்டின் உரிமையாளர் சண்டை போட்டிருக்கிறார். ``உனக்கு நான் வீடு வாடகைக்கு விட்டிருக்கிறேன், நீ அதன் மேல் வந்து தி.மு.க. கொடியைக் கட்டுகிறாயா” என்று சண்டை போட்டிருக்கிறார். இதனால் கோபப்பட்ட தவமணி அவர்கள் ஒரே வாரத்தில் சொந்த வீட்டை வாங்கி, அங்கே கழகத்தின் கொடியை ஏற்றிருக்கிறார். இதுதான் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும் நமக்குக் கற்றுக் கொடுத்த சுயமரியாதை உணர்வு.

அந்தச் சுயமரியாதை உணர்வோடுதான் இன்றைக்கு நம்முடைய கழகத் தலைவர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் ஒரு சிறந்த திராவிட மாடல் அரசை நடத்திக் கொண்டிருக்கிறார். இன்றைக்கு இந்தத் திருமண நிகழ்ச்சியில்கூடப் பார்த்தீர்கள் என்றால், ஆண்களுக்கு நிகராக, இன்னும் சொல்லப்போனால், ஆண்களைவிட அதிகமான மகளிர், தாய்மார்கள் பங்கேற்றிருக்கிறீர்கள்.

### படிப்பதற்கு உரிமை

ஒரு காலத்தில் மகளிர் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு உரிமையே கிடையாது, படிப்பதற்கு உரிமை கிடையாது. ஆனால், இன்றைக்கு மகளிர் வீட்டை விட்டு வெளியே வந்து படிக்கிறீர்கள், வேலை பார்க்கிறீர்கள். இதற்கெல்லாம் விதை போட்டது நம்முடைய திராவிட இயக்கம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. தந்தை பெரியார் அவர்கள்தான் பெண் விடுதலைக்காக முதன்முதலில் குரல் கொடுத்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலவரானவுடன் பெரியாரின் சிந்தனைகளையெல்லாம் சட்டமாக்கினார். டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தச் சட்டத்தை எல்லாம் நடைமுறைப்படுத்தினார். தான் ஆட்சிக்கு வந்தபொழுது பெண் விடுதலைக்காகப் புதிய சட்டங்களை கலைஞர் கொண்டுவந்தார்.

இன்றைக்கு இந்தியாவிலேயே பார்த்தீர்கள் என்றால், தமிழ்நாட்டில்தான் முதன்முதலில் பெண் காவலர்களை நியமித்தார் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்கள்தான் பெண்களுக்கு சொத்தில் சம உரிமையைக் கொடுத்தார். உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். இந்தியாவிலேயே முதல் முறையாக மகளிர் சுயஉதவிக் குழுக்களைக் கொண்டு வந்ததும் டாக்டர் கலைஞர் அவர்கள்தான்.

### காலை உணவுத் திட்டம்

இப்படி கலைஞர் வழியில் நம்முடைய தலைவர் அவர்கள் மகளிருக்கு என்று பல சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறார். உதாரணமாக, மகளிர் விடியல் பயணத் திட்டம் (கட்டணம் இல்லாப் பேருந்துத் திட்டம்), கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, குழந்தைகளுக்கு முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் இப்படிப் பல்வேறு திட்டங்களை அளித்திருக்கிறார்.

மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் மூலமாக, இந்தப் பகுதியில் பட்டாசுத் தொழிற்சாலை, தீப்பெட்டித் தொழிற்சாலை, பிரிண்டிங் பிரஸ் என்று வேலைக்குச் செல்கின்ற மகளிர் பலர் இன்றைக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாயை மிச்சம் பிடிக்கிறார்கள். முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 22 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறுகிறார்கள்.

மகளிர் உரிமைத்தொகை ஒவ்வொரு மாதமும் கடந்த 27 மாதங்களாக 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாயை நம்முடைய தலைவர் அவர்கள் உரிமைத் தொகையாகக் கொடுக்கிறார். வருகிற 12-ஆம் தேதி முதல் இன்னும் கூடுதல் மகளிருக்கு உரிமைத் தொகையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்க இருக்கிறார். எனவே, மகளிர் முன்னேற்றத்துக்கு இந்த அரசு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், நம்முடைய தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்றால், அதற்குக் நம்முடைய முதலமைச்சர் கொண்டு வந்திருக்கக்கூடிய பல திட்டங்கள்தான் முக்கியமான காரணம்.

### மணமக்களுக்கு ஒரு வேண்டுகோள்!

இதைப் பொறுக்க முடியாத ஒன்றிய பா.ஜ.க. அரசு இன்றைக்குப் பல்வேறு வகையில் நெருக்கடிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நிதி உரிமையைப் பறிக்கிறார்கள். எஸ்.ஐ.ஆர். என்று சொல்லி, நம்முடைய வாக்குறுதியைப் பறிக்க முயற்சிக்கிறார்கள். தொகுதி மறுவரையறை என்று சொல்லி தொகுதி எண்ணிக்கைகளைக் குறைக்கப் பார்க்கிறார்கள். ஆனால், இவற்றையெல்லாம் தாண்டி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு நம் தமிழ்நாட்டை வழிநடத்திக் கொண்டிருக்கிறார். ஆகவே, தமிழ்நாட்டின் வளர்ச்சி தொடர வேண்டும் என்றால், நீங்கள் ஒவ்வொருவரும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உங்களுடைய ஆதரவைக் கொடுக்க வேண்டும்.

மணவாழ்க்கையில் இணைந்திருக்கக்கூடிய பிர்லாவும், பேட்ரிசியாவும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, ஒற்றுமையாக நல்ல நண்பர்களாக வாழ வேண்டும் என்று உங்கள் சார்பாக வாழ்த்துகிறேன். ஒருவருக்கு ஒருவர் புரிந்துகொண்டு, சுயமரியாதையோடு நடந்துகொள்ள வேண்டும். எது எதுக்கு விட்டுக்கொடுக்க வேண்டுமோ, அதற்கு விட்டுக்கொடுத்து, எதற்குக் விட்டுக்கொடுக்கக் கூடாதோ, அதற்கெல்லாம் விட்டுக்கொடுக்காமல் உறுதியோடு உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் வாழ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மணமக்களுக்கு ஒரே ஒரு வேண்டுகோள். உங்களுக்குப் பிறக்கப் போகின்ற குழந்தை அது ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, அதற்கு அழகான ஒரு தமிழ்ப் பெயரைச் சூட்ட வேண்டும் என்று உங்கள் சார்பாகக் கேட்டுக்கொண்டு, இல்வாழ்வில் இணைகின்ற நீங்கள் பெரியாரும் பகுத்தறிவும் போல, பேரறிஞர் அண்ணாவும் ஆற்றலும் போல, கலைஞரும் கழகமும் போல, தலைவரும் உழைப்பும் போல பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், தங்க பாண்டியன், அசோகன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல வாரியத் துணைத் தலைவர் ராஜா அருண்மொழி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.ராஜன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வனராஜா, மாநகரக் கழகச் செயலாளர் உதயசூரியன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணைச் செயலாளர் தனுஷ்குமார், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி. பி.ராஜா, மாநகர துணை மேயர் விக்னேஷ் பிரியா காளிராஜன்,

மாவட்டக் கழக நிர்வாகிகள் தங்கராஜ், தினேஷ் ஆனந்த், ராமமூர்த்தி, மதி சுபேதா, வேலுச்சாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கிருஷ்ணகுமார், தொகுதி பார்வையாளர் டாக்டர் செண்பகவிநாயகம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சந்திரன், செல்வம், பொதுக்குழு உறுப்பினர் பால்ராஜ், மாநகரக் கழக நிர்வாகிகள் மாணிக்கம், சாந்தகுமார், பாக்கியலட்சுமி, வெள்ளைத்துரை பாண்டியன், பகுதிக் கழக செயலாளர்கள் செல்வம், கருணாநிதி பாண்டியன், மாரீஸ்வரன், அப்துல் முத்தலிப், காளிராஜன், ஞானசேகரன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் முத்துச்செல்வம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் திலீபன் மஞ்சுநாத், ஐயனார், ஜெகன், சிதம்பரபாரதி, சேகர், கார்த்திகேயன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதியில் வாக்காளர் சிறப்புத் தீவிர திருத்த (SIR) பணியில் ஒன்றிய நகர பேரூர் கழகங்களில் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்களுடன் இணைந்து சிறப்பாக முன் களப்பணியாற்றிய அனைத்து பொறுப்பாளர்களையும் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம். எல் ஏ. சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். உடன் நிர்வாகிகள் உள்ளனர்.

## நாளை நடைபெறுகிறது!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!


## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு

காஞ்சிபுரம், டிச.5,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை நடைபெறுகின்றது என்று மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம். எல்.ஏ. அறிவித்துள்ள அறிவிப்பு வருமாறு:-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை (6.12.2025- சனிக்கிழமை) காலை 9.30 மணியளவில் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில், மாவட்டக் கழக அவைத்தலைவர் ச.இனியரசு தலைமையிலும், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஓ.எஸ்.தினகரன், க.செல்வம் எம்.பி., திருமதி கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.



எனவே, இக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர-நகர-ஒன்றிய-பகுதி-பேரூர் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

அது போது டிச.14 அன்று திருவண்ணாமலையில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு கூட்ட நிகழ்ச்சி சம்பந்தமாக மற்றும் கழக அக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.